பொருட்காட்சி வைத்ததன் காரணமாக, புதிய புதிய தொழிற்சாலைகள் வைக்கவேண்டும் என்ற ஆர்வம் பலருக்கு வந்திருக்கிறது. தனியார்த் துறையில் உள்ள பலர், தனித்தனியாகப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். சில பல தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற முறையில் பொதுவார்த் துறையில் உள்ள தொழிலதிபர்களை ஆலோசித்துக் குறிப்புகள் திரட்டப் பட்டு வருகின்றன. இப்பொழுது எந்த முடிவும் செய்வதற்கில்லை. முடிவு இதைத் தொடர்ந்துதான் வரவேண்டும்.

திரு. பெ. மலைச்சாமி : இந்தப் பொருட்காட்சியை நடத்துவதன் மூலம் கிடைக்கின்ற வருவாயில் தமிழக அரசுக்கும் பங்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதிலே நட்டம் ஏற்படும், அதை ஈடுகட்ட அரசாங்கம் முன்வருமா என்றுதான் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, மிச்சப்படுத்தி அரசாங்கத்திற்குத் தரும் நிலையில் இல்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : பொருட்காட்சியில் உள்ள கோபுரம் நிரந்தரமாகவே வைக்கப்பட்டிருக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது நிலையாக இருக்கக் கூடிய மாதிரிதான் ஏழு நிலை மாடமாக எழுப்பப்பட்டிருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMAIAH : Sir, a number of countries and States have established their pavilions in the World Fair. I wish to know from the Hon. Minister for Industries whether our Government have given any financial assistance in establishing these pavilions there ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக அரசின் சார்பாக வைக்கப்பட்டிருக்கிற அந்தக் காட்சிசாலைக்கு 15 லட்ச ரூபாய் செலவழிக்கப் பட்டு, பல் வேறு துறைகளைப் பற்றிய காட்சிகள் அங்கே வைக்கப்பட்டிருக் கின்றன.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தக் கோபுரம்தான் ஏழுநிலை மாடமாக எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், ரதம் இருக்கிறதே, அது, உண்மையாகவே தமிழகத்தின் கலைக்கு ஏற்ற வகையில் நன்றாக அமைந்திருக்கிறது. அந்த ரதம் சர்க்காரால் செய்யப்பட்டதா ? அல்லது கோவிலிலிருந்து இழுத்து வரப்பட்டதா? சர்க்காரே செய்த ரதமாக இருந்தால், அதை நம்முடைய இந்தக் கோட்டைக்கு எதிரில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒரு கோவிலில் இருந்து கொண்டுவரப்பட்ட ரதம்தான். மீண்டும் அந்தக் கோயிலுக்கே அது திருப்பி அனுப்பப்படவேண்டும்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : பொருட்காட்சியில் சிறப்பாக அமைக் கப்பட்ட நாட்டினருக்கு அல்லது மாநிலத்திற்கு பரிசு வழங்கும் உத்தேசம் ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

தமிழில் தந்திச் செய்தி.

***141 வினா. : திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிற்குள் அனுப்பப்படும் தந்திச் செய்திகளைத் தமிழில் அனுப்பும் முறையினை செயல்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டிற்குள்ளாகவே சில குறிப்பிட்ட தந்தி நிலையங்களைப் பொறுத்த வரையில் தந்திச் செய்திகளைத் தமிழிலேயே அனுப்புவதற்கு வசதி செய்து தருமாறு இந்திய அரசிற்குச் சென்ற 1966-ம் ஆண்டில் இவ்வரசு எழுதியது. இந்திய அரசு தன்னுடைய பதிலில் தமிழில் தந்திச் செய்திகளை அனுப்புவதில் சில சிக்கல்கள் ஏற்படுமென்றும் மற்ற மொழிக்காரர்களும் இவ்வசதியைத் தங்களுக்கும் தருமாறு கேட்பார்களென்றும் இப்போதுள்ள முறையிலேயே ரோமன் எழுத்துக்களில் தமிழ்ச்செய்தியை அனுப்பலாமென்றும் குறிப்பிட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இதுபற்றி மீண்டும் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மீண்டும் வற்புறுத்தலாம். இப்பொழுது அந்தந்த மாநில வட்டார மொழிக்கு அதிகமான வசதிகளும் சலுகைகளும் தரவேண்டும் என்ற கோரிக்கை இருக்கும் காரணத்தால், மீண்டும் வற்புறுத்துவதன் மூலம் அந்தச் சலுகைகள் கிடைக்கலாம். கிட்டதட்ட இரண்டு கோடி, மூன்று கோடி, மூன்றரை கோடி மக்கள் என்ற அளவில் ஒவ்வொரு மாநிலமும் இருக்கும் காரணத்தால், அத்தகைய மாநிலங்களில் இத்தகைய ஏற்பாடுகள் செய்வதில் கடினம் இராது என்ற அடிப்படையில், மீண்டும் வற்புறுத்தலாமா என்பதுபற்றித்தான் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

சத்திபமங்கலம்–பழனி ரயில் பாதை.

*142. **வினா. திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலத்திற்கும் பழனிக்குமிடையே கோபி, குன்னத்தூர், தாராபுரம் வழியாக ரயில் பாதை அமைக்கும்படி மத்திய அரசுக்கு இம்மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா ?

(இ) ஆம். எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இந்திய அரசுக்கு அவ்வித பரிந்துரை எதும் செய்யப்படவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : சத்தியமங்கலத்திலிருந்து மதுரைக்குச் செல்வதற்கு எந்தவிதமான ரயில்வே போக்குவரத்தும் இல்லாமல் இருக்கிறது. சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் வரையில் ஒரு இரயில் பாதை போடும் திட்டம் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, முதலில், மதுரையிலிருந்து சத்தியமங்கலம் வரை இரயில் பாதை போட்டால், பின்னால் விரிவுபடுத்த வசதியாக இருக்கும். ஆகவே, அதைப் போடுமாறு நம்முடைய அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரிந்துரை செய்யப்பட்ட பல இரயில் பாதைகளையே இன்னும் மத்திய அரசு நிறைவேற்றாத நிலையில், ஒப்பளிப்பு வழங்காமல் இருக்கிறது. இருப்பதை எடுத்துவிடக்கூடிய நிலைமையிலும் அவர்கள் இருக்கிறார்கள். முதலில் அதைக் காப்பாற்றிக் கொண்டுதான், இவைகளைப் பற்றிப் பிறகு யோசிக்க வேண்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : காமராஜநகரிலிருந்து சத்தியமங்கலத்திற்கும், பிறகு சத்தியமங்கலத்திலிருந்து ஈரோடுக்கும் ஒரு இரயில் பாதை அமைப்பதாக யோசனை இருந்தது. அது சம்பந்தமாக இப்பொழுது ஏதாவது யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே சொன்னேன். பரிந்துரைக்கப்பட்ட இரயில் பாதைகளில் இவை இல்லை.